பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 18 சனிக்கிழமை(04.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 339

# தேவையான அளவைவிட குறைவாகவே குடாநாட்டுக்குப் பொருள்கள் கிடைத்தன!

## மக்கள் வரிசையில் நிற்கவேண்டிய நிலை இதனால்தான் என்கின்றார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கோரப்பட்ட அளவிலும் பார்க்கக் குறைவாகவே அரசால் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மக்களுக்குப் பொருள்களை விநியோகிக்கவேண்டியிருக்கிறது.

இதனால், குடாநாட்டு மக்கள் வரிசை வரிசையாக நின்று பொருள்களை வாங்க வேண்டியஅசௌகரிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

-இவ்வாறு தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாவட்டத்திற்கு 2006 செப்ரெம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களுக்கு உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் 25 ஆயிரத்து 104 மெற்றிக்தொன் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஓகஸ்ட் மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதிவரை 15 தடவைகளில் 19 ஆயிரத்து 358 மெற்றிக் தொன் பொருள்கள் அனுப்பப்பட்டன. பொருள்கள் கிடைக்கும் அளவுக்கு அமைவாக ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் அவற்றின் குடும்ப எண்ணிக்கை ரீதியாகப் பாவனைப் பொருள்கள் பங்கீடு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 5 ஆயிரத்து 747.6 மெற்றிக்

(02 ஆம் பக்கம் பார்க்க)

# ஏ-9 வீதியைத் திறப்பது குறித்து ஜனாதிபதியுடன் ரணில் பேச்சு!

## பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாமல் திறப்பது குறித்து விரைவில் முடிவாம்

கொழும்பு,நவம்பர் 4

**ஏ-9 பாதையைத் திறப்பதன் அவசியம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.**

**நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து உண்டாகாத வகையில் அப்பாதையை எவ்வாறு திறப்பது என்பது குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி, ரணிலிடம் தெரிவித்திருக்கிறார்.**

இந்தத் தகவல்களை எதிர்க்கட்சித் தலைவரே நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் வெளியிட்டார்.

தேசிய ஊழியர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று ஸ்ரீகொத்தாவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்சொன்ன தகவல்களைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாகப் பேசுகையில் கூறியதாவது:-

ஏ-9 பாதை மூடப்பட்டதன் காரணமாக மனிதாபிமானப் பிரச்சினை ஒன்று தோன்றியிருப்பது உண்மை. இந்த நிலையை நீக்க வேண்டியது அவசியம். அதனால், இப்பாதையைத் திறப்பது தொடர்பாக நான் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினேன். ஏ-9

(08ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றும் வான் தாக்குதல்

கொழும்பு, நவ.4

இலங்கை விமானப்படை விமானங்கள் இரண்டாவது நாளாக நேற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதி மீது குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

மன்னாரின் வடமேற்குப் பகுதியில் கடற்புலிகளின் இரண்டு நிலைகள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரங்கள் வெளியாகவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும் இது தொடர்பாக விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

## இணைத்தலைமை வருத்தம்!

கிளிநொச்சியில் பொதுமக்களின் குடியிருப்புகள் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் பொதுமக்கள் ஐவர் கொல்லப்பட்டமை தொடர்பாக இணைத்தலைமை நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன.

இது குறித்து இணைத்தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிளிநொச்சியில் நவம்பர் 2ஆம் திகதி வீடு ஒன்றின் மீது வான்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ இணைத் தலைமை நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே மற்றும் அமெரிக்கா) தூது

(08ஆம் பக்கம் பார்க்க)

# தரை, கடல், வான் வழியாக அரசு வடக்கு - கிழக்கை தாக்கத் திட்டம்

## பிரதமர் ரட்ணசிறி நேற்றுத் தகவல்



கொழும்பு, நவ.4

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசு தரை, கடல், வான் வழியாகத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கின்றது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

ஜனநாயக அரசைப் புலிகள் ஆயுதங்கள் கொண்டு அச்சுறுத்துகிறார்கள். இந்த நிலை தொடர்வதை நாங்கள் அனுமதிக்க முடியாது என்றும் பிரதமர் கூறியிருக்கின்றார்.

போரில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த படையினரின் குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கும் வைபவம் நேற்று பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்த வைபவத்தில் உரையாற்றுகையிலேயே பிரதமர் தாக்குதல் நடத்தும் அரசின் திட்டத்தை அறிவித்தார்.

அவர் அங்கு கூறியதாவது:-

''விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஏன் அரசு இராணுவத் தாக்குதல்களைத் தொடுக்காமல் இருக்கின்றது என்று பலரும் எங்களிடம் கேள்வி எழுப்புகின்றார்கள்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## நானாவிதப் பொருள்களுடன் கப்பல் பருத்தித்துறைக்கு

யாழ்ப்பாணம்,நவ.4

குடாநாட்டில் தட்டுப்பாடாக உள்ள பூடு, மிளகாய் உட்பட நானாவிதப் பொருள்களுடன் 'ஜென்கிளிப்பர் 1' என்ற கப்பல் நேற்று பருத்தித்துறை வந்துசேர்ந்துள்ளது.

இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் இன்று ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் 50ஆயிரம் கிலோ பூடு, 50 ஆயிரம் கிலோ செத்தல் மிளகாய், ஒரு லட்சம் கிலோ கடலை, 50 ஆயிரம் கிலோ பயறு, 50 ஆயிரம் கிலோ சர்க்கரை, 200 மெற்றிக்தொன் அரிசி, 250 பரல் தேங்காய் எண்ணெய் ஆகியன எடுத்துவரப்படுகின்றன.

கப்பலில் எடுத்துவரப்படும் பொருள்கள் அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

(அ-1)

## கைதான ஐந்து இளைஞர்களும் மேலதிக விசாரணைக்கு கொழும்புக்கு

### மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4

குடாநாட்டில் கடந்த சில தினங்களில் சீருடையினரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து இளைஞர்களும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மனித உரிமைகள் அதிகாரிகள் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரஸ்தாப இளைஞர்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னியில் இருந்து 33 மீனவர்கள் நான்காவது நாளாக குருநகருக்கு

## மடுவில் தங்கிய 9 பேரும் கூட வந்தனர்

குருநகர், நவ.4

வன்னியில் இருந்து குடாக்கடலூடாக கடற்கலங்களில் 33 கடற்றொழிலாளர் நேற்றும் குருநகர் இறங்குதுறைக்கு வருகை தந்தனர்.

இப்படகுகளில் கடந்த ஓக்ஸ்ட் மாதம் மடுத்திருப்பதிக்குச் சென்று யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாத நிலையில் இருந்த 9பேரும் கூட வந்தனர். அவர்களில் 5பேர் பெண்களாவர். அத்துடன் 3குழந்தைகளும் ஓர் ஆணும் இதில் அடங்குவர்.

வன்னியில் இருந்து நேற்று 10 பிளாஸ்ரிக் படகுகளிலும் இயந்திரப் படகு ஒன்றிலும் 36 கடற்றொழிலாளர்கள் குருநகர் இறங்குதுறைக்கு வந்தனர்.

இதில் 33 பேர் குருநகரையும் 3பேர் மண்டைதீவையும் சேர்ந்த கடற்றொழிலாளர்களாவர். இவர்களுடனேயே மடுத்திருப்பதிக்குச் சென்று வரமுடியாத நிலையில் இருந்த 9பேரும் வருகை தந்தனர். இவர்கள் மண்டைதீவைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் படையினரின் சோதனையை அடுத்து குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தலைவர் பொறுப்பில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வன்னிக்குத் தொழில் செய்வதற்குச் சென்று மோதல்கள் காரணமாக குடாநாட்டுக்குத் திரும்ப முடியாமல் அங்கு தங்கியிருந்த மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வள்ளங்களில் இங்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில் திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மொத்தம் 135 மீனவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி உள்ளனர். (1-51)

# கப்பல் பயணிகளுக்கு வேண்டிய உதவிகளை இராணுவம் வழங்குகிறது

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்ப்பாணத்தில் இருந்து 639 பயணிகளை ஏற்றிக்கொண்டு ''ஜெட்லைனர்'' என்ற கப்பல் காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை சென்றடைந்ததாக, பலாலி பாதுகாப்புத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் பி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கப்பல் பயண ஏற்பாடுகள் யாழ். பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தினரால் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் சிங்கள மகாவித்தியாலயத்தில் பதிவுகள் செய்தபின் அங்கிருந்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கும், அதில் இருந்து காங்கேசன்துறை முகத்திற்கும் வாகன வசதிகள் இராணுவத்தினரின் பேரூந்துகளின் மூலம் வழங்கப்பட்டது. தற்போது தென்மாகாணத்திற்கு செல்லும் மக்களுக்கு இராணுவத்தினரால் திருகோணமலையில் இருந்தும் வாகன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பயணிகளுக்கு உணவு, நீர் போன்றவற்றுடன் வைத்திய வசதிகளும் வழங்கி அவர்களின் பயணத்திற்கு உறுதுணை வழங்கப்பட்டது. இதில் பயணம் செய்த பொதுமக்கள் இப்பயணத்திற்கு ஒழுங்குகள் செய்து கொடுத்த இராணுவத்தினருக்கும், அரசாங்கத்துக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர் - என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (அ)

# புலிகளின் முகாமே தாக்கப்பட்டது குடியிருப்பு என்பது முழுப் பொய்!

## அமைச்சர் ரம்புக்வெல அடித்துக் கூறுகிறார்

கொழும்பு, நவ.4

புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது விமானப் படையினர் தாக்குதல் நடத்தும் போதெல்லாம் புலிகள், குடியிருப்பு மீது விமானத் தாக்குதல் நடத்தப்படுவதாக குற்றஞ் சாட்டுவது வழமையே. கிளிநொச்சியில் புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றின் மீதே கிபிர் விமானங்கள் குண்டுவீச்சு நடத்தின.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அருகே குடியிருப்புப் பகுதிகள் மீது நேற்று முன்தினம் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியதில் இரு மாணவர்கள் உட்பட ஐவர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இது குறித்துக் கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ-02)

# வவுனியா-ஆசிகுளம் பகுதியில் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

வவுனியா, நவ.4

வவுனியா, சமனளங்குளம் - ஆசிகுளத்தில் நேற்று அதிகாலை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

கிளிநொச்சியைச் சொந்த இடமாகக் கொண்ட மாரிமுத்து சந்திரசேகரம் (வயது-36) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இவரது வீட்டுக்குச் சென்ற ஆயுதபாணிகள் இவர் மீது சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று கூறப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து இவர் வவுனியா - சிதம்பரபுரம் நலன்புரி முகாமில் தங்கியிருந்த பின் ஆசிகுளம் பகுதியில் குடியமர்ந்தார்.

மிதிவெடியில் சிக்கி ஒரு காலை இழந்த இக் குடும்பஸ்தர் யாரால் கொல்லப்பட்டார் என்பது தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-164)

# தொழில்நுட்ப அலுவலராக நால்வருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், நவ.4

இலங்கை தொழில்நுட்பச்சேவையின் தொழில்நுட்ப அலுவலர் தரம் II "ஆ" பிரிவுக்கு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு நான்கு பேருக்கு நியமனம் வழங்கியுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் தங்களுக்கு நியமனம் குறித்து ஒதுக்கப்பட்ட மாவட்டச் செயலகத்துக்கு எதிர்வரும் திங்கட்கிழமை சமுகமளித்து கடமையைப் பொறுப்பேற்குமாறும் -

அத்திணைக்களத் தலைவர் ஊடாக அறிக்கையை உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பும்படியும் - யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார்.

நியமனம் பெற்றவர்களின் விவரமும், நியமனம் பெற்ற மாவட்டமும் வருமாறு:

எம்.சிவதாசன் (சங்குவேலி வடக்கு) வவுனியா, என்.ஜனார்த்தனன் (உடுவில் கிழக்கு) - வவுனியா, ஆர்.டி.வனஜா (சங்குவேலி வடக்கு) - யாழ்ப்பாணம், ரி.விஜய பாலன் (உடுவில்), மன்னார். (1)

# 'கிபிர்' விமானம் வட்டமிட நேற்று முற்பகல் அல்லோலகல்லோலப்பட்டது கிளிநொச்சி

## நெரிசலில் சிக்கி ஒருவரின் கை முறிந்தது

கிளிநொச்சி, நவ.4

கிளிநொச்சி நகரப்பகுதியை நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கிபிர் விமானம் வட்டமிட்டதனால் மக்கள் கிலி கொண்டு பாதுகாப்புத் தேடி ஓடியதால், நகரம் சில மணி நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

கிளிநொச்சி நகரப் பகுதி வழமையான பணிகளுடன் இயங்கிக்கொண்டிருந்த வேளை, திடீரென வந்த கிபிர் வட்டமிட்டது.

இதனால் வீதியில் சென்றோர் தமது வாகனத்தை அந்தந்த இடங்களில் போட்டு விட்டும், வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டாமலும் பாதுகாப்புத் தேடி ஓடினார்கள்.

இந்த அல்லோலகல்லோலத்தில் சிக்கி ஒருவரின் கை முறிந்தது. நோயாளியான இவர் கிளிநொச்சி ஆஸ்பத் திரியில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வராவார்.

கிபிர் விமானம் கடந்து சென்ற பின்னர் நிலைமை வழமைக்கு திரும்பியது. (அ-1)

# தந்தைக்கும் மகனுக்கும் விளக்க மறியல்

யாழ்ப்பாணம், நவ.4

இளவாளை முருகபுரம் பகுதியில் தீபாவளியன்று தாக்கதலுக்கு இலக்காகி இளைஞன் ஒருவன் மரணமான சம்பவம் குறித்து, அதேயிடத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## பல்கலைக்கழக சமூகத்தின் செய்தி இதழ் வெளிவந்தது

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் ''எம்பதி'' (EMPATHY) என்னும் செய்தி இதழ் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆகியன இணைந்து இந்த இதழை மாதாந்தம் வெளியிடவுள்ளன.

தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வியல் பிரச்சினைகளை உலக அரங்குக்கு கொண்டு செல்லும் ஊடகமாக வெளிவந்துள்ள இந்த இதழ் ஆங்கிலத்தில் பிரசுரமாகியுள்ளது. (1)

# தேவையான அளவைவிட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொன் உணவுப் பொருள்கள் குறைவாக அனுப்பிவைக்கப்பட்டன.

பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படுவதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வரிசை வரிசையாக நின்று பொருள்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும், தேவையான அளவில் பொருள்கள் விநியோகிக்கப்பட இயலாது போய்விட்டது.

மக்களின் அசௌகரியமான நிலைமையைத் தவிர்த்துக்கொள்வதற்காக யாழ். மாவட்டத்திற்குத் தேவையான பொருள்களைக் கோரப்பட்ட அளவில் அனுப்பிவைக்குமாறு அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நவம்பர் மாதத் தேவைக்கான கீழ்க் குறிப்பிடப்படும் அளவுகளின் அடிப்படையில் பொருள்களை அனுப்பிவைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் - 12 ஆயிரம் மெ.தொ, ஏனைய உணவுப் பொருள்கள் - 8 ஆயிரத்து 336 மெ.தொ, உணவல்லாத பொருள்கள் - 738 மெ.தொ, மருந்துப் பொருள்கள் 100 மெ.தொ., பசளை - ஆயிரத்து 872 மெ.தொ., கால்நடைத் தீவனம் - ஆயிரத்து 300 மெ.தொ, விவசாய இரசாயனப் பொருள்கள் - 10 மெ.தொ, மாணவர்களுக்கான காகிதாதிகள் - 100 மெதொ., அலுவலக காகிதாதிகள் - 50 மெ.தொ., ஏனைய பொருள்கள் - 25 மெ.தொ.

இந்தப் பொருள்களை முற்று முழுதாக அனுப்பிவைக்குமாறும், அவ்வாறு இல்லாவிடின் தொடர்ந்தும் மக்கள் உணவுப் பொருள்களுக்கு மாத்திரமன்றி ஏனைய பொருள்களைப் பெற்றுக்கொள்வதிலும் பல சிரமங்களையும், தட்டுப்பாடுகளையும் எதிர்நோக்கவேண்டிய நிலைமை உருவாகும் எனவும்-

இதனால், யாழ். மாவட்டத்திற்குத் தேவையான எரிபொருள் உட்பட மக்கள் பாவனைக்கான எந்தப் பொருளையும் வரிசையில் நிற்காது நாம் விரும்பிய இடத்தில், தாம் விரும்பிய அளவில், நீதியான விலையில் கிடைக்கக்கூடிய எற்பாட்டைச் செய்யவேண்டும் எனவும் அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திற்குத் தேவையான பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றைக் கோரப்பட்ட அளவில் விநியோகிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளன. என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்களிடம் தொலைபேசி வசதி உள்ளதா?

*குறைந்த கட்டணத்தில் IDD அழைப்புகளை மேற்கொள்ள விசேட சலுகைகள்*

**கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு 5 ரூபா, இந்தியா 22 ரூபா, ஐக்கிய அரபு நாடுகளுக்கு...**

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே. 222 7810

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெகநாதன் சிவபாக்கியவதி

### (ஈசன் அம்மா)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 65/3, ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெகநாதன் சிவபாக்கியவதி நேற்று (03.11.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெகநாதனின் அன்பு மனைவியும், ஜெகத்ஸ்வரன் (ஈசன்), திருமதி சியாமளா சோதிக்குமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ஜெயராஜ் (நோர்வே), ஜெயகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் வசந்தி, சோதிக்குமார், காந்திமதி, வத்ஸலா, கிருஷ்ணா ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி நாகமுத்து, திருமதி தையல்நாயகி மருதலிங்கம் (முன்னாள் விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை பலாலி - கோப்பாய்), அமிர்தலிங்கம் (அம்பலப்பெருமாள்), சிவராசா (கனடா - முன்னாள் கணக்காளர், புனர்வாழ்வு அமைச்சு), இந்திரராசா (கோட்டக் கல்வி அதிகாரி வவுனியா வடக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இளமாறன், தாரங்கினி, பவித்திரா, சதுஷன், சைத்திரியா, ஸ்ரீபன்ராஜ், பிரியங்கா, சோபிகா, இந்துஷா, சரேன், துஷாந்தன், துஷாரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*65/3, ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (54939)

தகவல்: ஜெகதீஸ்வரன் (மகன்)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா இராசம்மா

(காளிகோயிலடி, சங்கானை)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசம்மா நேற்று முன்தினம் (02.11.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் (உரிமையாளர், தேவி மரக்காலை) மனைவியும் காலஞ்சென்ற கனகர் - நாகம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற நாகமுத்து - சீதேவன் தம்பதியரின் மருமகளும் பாலசிங்கம் (மணியம்), காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தனபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களாகிய வைத்திலிங்கம், சின்னத்துரை, முத்தாச்சி, செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் Dr.நாகநாதர் (London), இராஜகுமாரி (Canada), சீதாதேவி (Canada), கமலாதேவி (London), இராயேஸ்வரி (சங்கானை), ஜெகநாதன் (Australia), விஸ்வநாதன் (London), நிர்மலாதேவி (மானிப்பாய்), சிவனேசன் (London) ஆகியோரின் பாசமிகு தாயும் Dr.இந்திரா (London), காலஞ்சென்ற அருணகிரி, முத்துக்குமாரசாமி (Canada), ஜெயச்சந்திரன் (London), இராயேஸ்வரன் (Colombo), காவேரி (London), Dr.நந்தினி (Australia), அமிர்தலிங்கம் (மானிப்பாய்), பிரபாநிதி (London) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2006) நண்பகல் 12 மணியளவில் மானிப்பாய், கனகசபை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

*கனகசபை வீதி, மானிப்பாய்.*
*T.P.: 021 4591603*

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

## திருமதி சண்முகநாதன் ஞானாம்பாள்

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் ஞானாம்பாள் நேற்று முன்தினம் (02.11.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னட்டி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதி-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகநாதனின் (இ.போ.ச. சாரதி, கோண்டாவில்) அன்பு மனைவியும் சுஜீதரன், சஞ்சீவன், சிந்துஜன், துவாரகா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பகீரதன் (மாணவன், கைதடி விக்கினேஸ்வராக் கல்லூரி), துஸ்யந்தி (மாணவி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் நவரட்ணம் (ஆஸ்திரேலியா), தவமலர், சிவபாக்கியம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி.

தகவல்: க.சண்முகநாதன் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுப் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் : லக்ஷ்மன்)

## ஆசிரியர் செயலமர்வுகள்

வடமராட்சி கிழக்கு,நவ.4

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7, தரம் 8, தரம் 9 ஆகிய வகுப்புக்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை வடமத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு கணிப்பீட்டுப் கருவிகள் தயாரிப்பது சம்பந்தமாக நடைபெறவுள்ளதாகவும் இவ்வகுப்புக்களில் விஞ்ஞான பாட்த்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-182)

* * *

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், க.பொ.த.(உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவான ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் ஆகியோருக்கான முன் சேவைப் பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வளநிலையத்தில் இப்பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

இதுவரை பயிற்சிகளைப் பெறாத யாழ். வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இப்பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (1-203)

* * *

யாழ்ப்பாணம்,நவ.4

வடமராட்சி கல்வி வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நியமனம் பெற்ற ஆசிரியர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

முதல் கட்டமாக இன்று முதல் மூன்று தினங்களும் -

2ஆம் கட்டமாக 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளிலும் -

3ஆம் கட்டமாக 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளிலும் பயிற்சிகள் வழங்கப்படும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள ஆசிரிய நிலையத்தில் இந்தப் பயிற்சி வழங்கப்படும் என்றும் -

குறிப்பிட்ட ஆசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு - வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.(118-202)


**கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான**

★ பொது அறிவு
★ பொது உளச்சார்பு
★ மொழித்திறன்

மாதிரி வினாத்தாள் இங்கு கிடைக்கும்

**திகழ் கல்வி நிறுவனம்**
கே.கே.எஸ். வீதி, இணுவில்.



**பொருளியற் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

**DAY CLASS**

**சனி, ஞாயிறு பிரிவுகள்**
**ஆரம்பம் - 04.11.2006**

| | | |
|---|---|---|
| 8 - 10 | புவியியல் | - குமரன் |
| 10 - 11 | நாடக.அர. | - கணேஸ் |
| 11 - 12 | அளவையியல் | – R.P. சர்மா |
| 12 - 1 | தமிழ் | - மீரா |
| 1 - 2 | இந்து நாகரீகம் | - ஜோதீஸ்வரன் |
| 1 - 2 | கிறிஸ்தவம் | - வசந்தன் |
| 1 - 2 | இந்துசமயம் | - தரன் |
| 2 - 3 | வரலாறு | - பத்மன் |

**வர்த்தகப்பிரிவு**

திங்கள் - வெள்ளி வரை நடைபெறுகின்றன. அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

Note : எமது கிளை நிறுவனம் இணுவில் பொருளியல் கல்லூரியில் கலை, வ்ர்த்தகப் பிரிவுகள் DAY CLASS நடைபெறுகின்றன.


# முகத்துவாரம் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு குருநகர் மீனவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

குடாக்கடலில் முகத்துவாரம் கடற்பகுதியில் தொழில்செய்வதற்கு அனுமதித்தால் ஓரளவுக்கு நாங்கள் வருமானத்தைப் பெறக் கூடியதாக இருக்கும் என்று குருநகர் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி தொடக்கம் எமக்கு தொழில் அனுமதி மறுக்கப்பட்டது. சில நாள்களின் பின்னர் குறிப்பிட்ட தூரம் வரை மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டது.

ஆயினும் குறிப்பிட்ட தூரத்தில் தொழில் செய்வது எமது அன்றாட தேவைக்கேற்ற வருமானத்திற்குப் போதாது. இதனால் எமது குடும்பத்தினர் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்கின்றனர்.

முகத்துவாரம் பகுதியில் தொழில்செய்ய அனுமதித்தால் ஓரளவுக்கு அதிகமான மீன்களைப் பிடிக்கக் கூடியதாக இருக்கும் - என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-111-88)

### இரு கிளைகளில் ஒரே முகாமையாளர்

# பிரதேச செயலர் மூலம் அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

தென்மராட்சியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரு கிளைகளில் ஒரே முகாமையாளர் கடமையாற்றுவது தொடர்பாகவும் அதனால் உணவுப் பொருள்கள் பெறுவதற்கு மக்கள் கஷ்டமுறுவதாகவும் கடந்த மாதம் 28ஆம் திகதி உதயனில் வெளிவந்த செய்தி தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக உதயன் செய்தியைச் சுட்டிக்காட்டி தென்மராட்சி பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில், ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகளில் ஒரு முகாமையாளரால் முகாமை செய்யப்படின் அது பற்றி தங்கள் பொருத்தமான உத்தியோகத்தர் மூலம் அறிந்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் ஆகியவர்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ப)

## சிறுவர் சங்கம நிகழ்வு நாளை

நெல்லியடி,நவ.4

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரசேத்தில் உள்ள கழகங்களை இணைத்து சிறுவர் சங்கம நிகழ்வொன்று நடத்தப்படவுள்ளது.

இந்ந நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது. (1-115)

## சம்பந்தர் விருது வழங்கும் நிகழ்வு இன்று

2005ஆம் ஆண்டுக்கான இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுக்குரிய 'சம்பந்தன் விருது' யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராகக் கடமையாற்றும் பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவுக்கு வழங்கப்படுகின்றது.

இவ்விருது வழங்கும் நிகழ்வு இன்று யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் (சிற்றி ஹோல்) பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும் வாழ்த்துரையை கலாநிதி பேராயர் சு.ஜெபநேசனும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி எம்.வேதநாதனும் நிகழ்த்துவர்.

பேராசிரியர் சிவலிங்கராஜா எழுதிய 'ஈழத்து தமிழ் உரை மரபு' என்ற ஆய்வு நூலே சம்பந்தன் விருதுக்கும் பரிசிலுக்கும் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இதுவரை ஆறு தமிழ் அறிஞர்கள் சம்பந்தன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். (1-115)


**தவறிவிட்டது**

மகேந்திரன் தயந்தினி என்பவரது தேசிய அடையாள அட்டை(848814252V) 22.10.2006 முதல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 187/20, ஆஸ்பத்திரி வீதி, யூனியன் லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (54937)


## மருதங்கேணி கோட்ட அலுவலகம் இடமாற்றம்

வடமராட்சி கிழக்கு,நவ.4

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலகம் தற்போது குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இயங்கிவருகின்றது.

முன்னர் மருதங்கேணியில் இயங்கிவந்த இந்த அலுவலகம் கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக தற்போது புதிய இடத்தில் இயங்கி வருகின்றது. (202-182)

## பௌர்ணமி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.4

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்,பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளன.

நாளை காலை 8 மணியிலிருந்து பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தால் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் திருமறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

* * *

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் ஐப்பசி பூரணை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இ.த.க. பாடசாலைப் பழைய கட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சேவாச்சிரமச் செயலாளர் சி.சிவமோகன் 'அன்பே உருவான குருதேவர்' என்னும் தலைப்பில் ஆன்மீக உரை நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து அஷ்டோத்திரநாம அர்ச்சனை, தீப ஆராதனை என்பன இடம்பெறவுள்ளன. (1-203)

* * *

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் நடத்தும் போயா தின ஆன்மீக நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தில் நடைபெறும். (202)

## பெற்றோல் விநியோகம் குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.4

குடாநாட்டில் நேற்று பெற்றோல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், ஒரு சில எரிபொருள் நிலையங்களில் மக்களுக்கு பெற்றோல் வழங்கப்படவில்லை.

அந்த எரிபொருள் நிலையங்களுக்குப் பெற்றோல் நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையங்களில் இன்று பொதுமக்களுக்கும் -

நாளை அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கும் - பெற்றோல் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை -

நேற்று பெற்றோல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இன்று அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு பெற்றோல் வழங்கப்படவுள்ளது. (1-203)

## தீக்குச்சி ஒன்றின் விலை ஒரு ரூபா

கோண்டாவில்,நவ.4

குடாநாட்டின் சில இடங்களில் தீக்குச்சி ஒன்று ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஏ-9 பாதை மூடப்பட்டதை அடுத்து குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. தீப்பெட்டிக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்நிலையில் தீக்குச்சி ஒன்று ஒரு ரூபாய் வீதம் விற்கப்படுகின்றது. (202-49)

## பிறப்புச்சான்றிதழ் படிவம் வடமராட்சியில் இல்லை

வடமராட்சி,நவ.4

பருத்தித்துறை பெரும்பாக காணி, இறப்பு, பிறப்பு அலுவலகத்தில் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்துள்ளன.

இதனால் சான்றிதழ்களைப் பெற விண்ணப்பிப்பதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதற்கான படிவங்களை தனியார் கடைகளில் பணத்துக்குப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (1-203-173)

## இலவச மகப்பேற்று சிகிச்சைகள்

வடமராட்சி,நவ.4

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் மகப்பேற்று வைத்திய சிகிச்சைகள் இடம்பெற்று வருகின்றன.

மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி சி.பவானி சிகிச்சைகளை வழங்கி வருகின்றார்.

சிகிச்சைகளின் போது நோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை சந்நிதியான் ஆச்சிரமத்தினர் இலவசமாக வழங்கி வருகின்றனர். (203-173)

## பதவியேற்பு வைபவம்

யாழ்ப்பாணம்,நவ.4

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் 6 ஆவது பதவி ஏற்பு வைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கழகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.றோட்டறக்ட் கழகத்தின் தலைவரும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் யாழ். மாவட்ட முகாமையாளருமான றோட்டேரியன் என்.சரவணபவனும் சிறப்பு விருந்தினராக யாழ். றோட்டறக்ட் கழகத்தின் இளைய தலைமுறை இயக்குநர் றோட்டேரியன் லக்சேந்திரகுமாரும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் புதிய தலைவராக றோட்டரக்டர் எஸ்.ஆனந்தசிவம் பதவியேற்கவுள்ளார். (1-202)

## உடற்கல்வி போதனாசிரியர்களுக்கு நாளை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.வலயத்தில் பணிபுரியும் தரம் 9 உடற்கல்வி சுகாதார போதனாசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் வருகை தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்கள [illegible]மான விய வருடம் ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் (05.11.2006) [illegible]யிற்றுக்கிழமை முற்பகல் 9.04 மணிமுதல் 10.34 மணி வரையுள்ள [illegible]சுவினி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவே[illegible]ளையில்

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
**சதீஷன் (சதீஷ்)**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருவளர் செல்வி
**அபிராமி (அபி)**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழ பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.பா.குபேந்திரன் (குகன்),
திருமதி கு.அனுசியா குடும்பத்தினர்,
74/1, கேசாவில் வீதி, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு.பொ.பிறேமேஸ்வரன்,
திருமதி.பி.மகாலெட்சுமி குடும்பத்தினர்,
சேச் லேன், ஆனைக்கோட்டை,
சகோதரி - பாஸ்கர் ரிஷாந்தி (லண்டன்).

(54789) (இரு வீட்டார் அழைப்பு)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




யாழ்ப்பாணம், வெள்ளாந்தெருவைச் சேர்ந்த
**மதிவண்ணன் - அட்சரவதி**
தம்பதியரின் செல்வப் புதல்வி
**மகிஷனா**
04.11.2006 இன்று தனது முதலாவது பிறந்தநாளை கெற்பேலியிலுள்ள அம்மப்பா வீட்டில் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அப்பா, அம்மா, தெஹிவளையிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, கெற்பேலியிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, ஏகன் மாமா, சண்முகா மாமா, சிந்து மாமா, சுவிஸிலுள்ள பேபி அத்தை, அகிலன் மாமா, அபி மச்சாள், வவா அத்தை, சுபாஷ் மாமா, கொட்டேனாவிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, சரணி அத்தை மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

13, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம். (54814)
தகவல்:
ம.மதிவண்ணன் (அப்பா).

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
### தரம் 6 அனுமதி - 2007

தரம் 6 ற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் 15.11.2006 புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை நேரடியாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- அதிபர்.

(54915)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் ஆங்கில இலக்கணம், வினாவிடை வகுப்புகள். *by.* விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. "THE ROYAL IS THE BEST"

## அறிவி[illegible]தல்
மாவட்ட நீதிமன்ற[illegible], சாவகச்சேரி

கொடிகாமம், மீசாலை வடக்கில் வசித்து மரண சாதனமின்றி அகால மரணமடைந்த இராமலிங்கம் சகீலன் என்பவரின் மரணச் சொத்து விடயத்தில்
- மரணமெய்தியவர்.

இராமலிங்கம் சகீலன்கைம்பெண்
பாமினி மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
தற்போதைய முகவரி,
312/4, கெந்தல வீதி, வத்தளை
இவரின் அற்றோனித்தத்துவகாரர்
பொன்னையா இராசரத்தினம்,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.
- மனுதார்.

வழ, இல. தத்துவம்/01/2006.

எதிராக,
1. சகீலன் கபிஷன்,
மீசாலை வடக்கு, கொடிகாமம்
பராயமற்றவரின் வழக்குப் பாது
காவலர்.
2. சின்னத்தம்பி இராமலிங்கம்,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.
- எதிர்மனுதார்கள்.

இவ்வழக்கு கொடிகாமம், மீசாலை வடக்கைச் சேர்ந்த அகாலமரணமான இராமலிங்கம் சகீலன் என்பவ்ரின் பூதல் சொத்துத் தொடர்பில் மனுதாரர் சகீலன் கைம்பெண் பாமினியினால் இம்மன்றில் 27.07.2006 லன்று தாக்கல் செய்து மனுதாரரை காலஞ்சென்றவரின் சொத்துக்களுக்கு நிர்வாகியாக நீதிமன்றம் மனுதாரருக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்கவேண்டுமென்றும் கோரியுள்ளார்.

மேற்குறித்த மனுதாரின் மனு, கோரிக்கைகள் தொடர்பாக எவருக்காவது ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் 20.12.2006ம் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

'மன்றின் கட்டளைப்படி'

- பதிவாளர்.

(சி-51285)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் நிகழ்ச்சித்திட்ட
உதவியாளராகப் பண[illegible]ரியும்
திருமதி தயாவாணி சிவகுமார்
அவர்களின் அன்புத்தாய்
**திருமதி இராஜேஸ்வரி மயில்வாகனம்**
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது சபையின் சார்பில் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகிறோம்.

செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை, மல்லாகம். (சி-51266)

## உடனடித்தேவை

எமது நிறுவனத்திற்கு வெற்றுத் தகரப் பேணிகள், தகரக் கொட்டுக்கள், வெற்று பால்மா பக்கற்றுக்கள் உடன் தேவை.

தொடர்பு:
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மரு[illegible]னார்மடம்.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Automatic washing machine, Osaki video CD பிளேயர், கேக் அடிக்கும் மெசின், Panasonic Deck என்பன விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 171A, Brown Road, Jaffna.
Tel. 222 3324 (54906)

## சேவை

55,000 அமெரிக்கா விசா லொத்தர் விண்ணப்படிவம் பெற, நவம்பர் 5ஆம் திகதி (ஞாயிறு) உதயனை பார்க்கவும்
Penguin Book Shop,
B2/F23 Bloemendhal Flats, Tel:- 071 6806843
Colombo - 13. 011 2438367

## தேவை

ரெலிக்கொம் (SLT) தொலைபேசி இணைப்பு தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 222 7646, 222 5115

## திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
### கலைப் பிரிவுகள்

| | |
|---|---|
| தமிழ் - M.சுரேஸ் | அரசியல் - T.திருமுருகன் |
| இ.நாகரிகம் - க.சத்தியதாசன் | அளவையியல் - P.கமல் |
| புவியியல் - S.கிருஸ்ணா | நா/அரங்கியலும் - I.சத்தியா |

2008, 2007, Paper Class, DAY CLASS
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 04.11.2006 10 a.m

## விற்பனைக்கு

A3, A4 கலர் பேப்பர் மற்றும் ஏனைய காகிதாதிகளும் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் [illegible]
தொ.பே.: 222 6115

## 45ஆம் நாள் நெருப்பு நினைவுகள்



அவனியில் பிறப்பு
21 . 06 . 1979

அநியாய அழிப்பு
21 . 09 . 2006

### அமரர் பேரம்பலம் லவகுமார்

காற்றே! நெல்நாற்றே! - எம்
பிள்ளை எங்கே? சொல்
நேற்றிருந்த எம்பிள்ளை
இன்று எங்கே? பதில் சொல்

ஆறடி உயரம் அழகிய வதனம்
கருங்காலித்தேகம் காருண்ய உள்ளம் - எம்
குலத்தின் விருட்சம்
காடிவளையெங்கும் பாடித்திரிந்த குயில்
''லவனே'' இன்று நீ எங்கே?

வியர்வை சிந்தி விளைவித்தபொருளதை
விற்பதற்குச் சென்றாயோ?
விலையாய் நின் உயிர்கொடுத்து
வெற்றுடலாய் மீண்டாயோ?

காத்திருந்து பாவியர் - உன்
உடல்வருத்திக் கொன்றாரோ?
பூத்திருந்த உனைக்கொன்று
ஏது சுகம் கண்டாரோ?

பெற்றவளுடன் பெயரிட்டதந்தையும்
பேரிடிபெற்றவராய் துடிக்கின்றோம்
உற்றவருடன் உடன்பிறந்தோரும்
உனை நினைத்து அழுகின்றோம்
நண்பர்களும் நீ வருவாயெனக் காத்திருக்கிறார்
நாற்றுமேடையும் நீவளர்த்தநாயும்
நின் வரவிற்காய் ஏங்குகின்றன
''லவனே'' எழுந்து வாடா - நீ
எரிந்த சிதையிலிருந்து மீண்டு வாடா
என்றும் உன் நினைவுடன்.

காடிவளை,
இளவாலை.
- குடும்பத்தினர்.
(54807)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
24 . 06 . 1936

மறைவு
05 . 10 . 2006

### கந்தையா துரையம்மா

இன்று (04.11.2006) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

வைசா இல்லம், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன மாணவன் ஆ.வின்ஸ்லோ
அவர்களின் அன்புத் தந்தை
**மரியாம்பிள்ளை வெலிச்சோர் ஆபரணம்**
அவர்களின் மறைவையொட்டி துயரத்தில்
ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

NIIT சமூகம், யாழ்ப்பாணம்.

(51270)


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 06/11/2006 -08.30

ஏனைய அனைத்துக் கணனிக்கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் 03/11/2006, 04/11/2006, 05/11/2006, 08/11/2006 ஆகியதிகதிகளில் ஆரம்பமாகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு தபாலில் வரும் பொதிகளை விநியோகிக்க ஏற்பாடு

## வட பிராந்திய பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் தகவல்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் பொதிகளை உரியவர்களுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என்று வட பிராந்திய பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வி. குமரகுரு தெரிவித்தார்.

கப்பலில் எடுத்து வரப்படும் பொதிகள் சேதமடைந்து விநியோகிக்க முடியாத நிலையில் காணப்படுவதால் பொதிகளைப் பொறுப் பேற்பதை வடக்கு - கிழக்கு அஞ்சல் அதிகாரிகள் நிறுத்திவிட்டனர் என்று வெளியாகிய தகவல் பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கப்பல்களில் பொதிகள் தொடர்ந்து எடுத்து வரப்படுகின்றன என்றும் - அவை சேதமடைந்திருப்பினும் கூட அவற்றை உரியவர்களிடம் சேர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் - வட பிராந்திய பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு வெளியே வசிப்போர் யாழ்ப்பாணத்தில் உள்ள தங்கள் உறவினர், நண்பர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை தபால் பொதி மூலம் அனுப்பி வருகின்றனர். ஏற்கனவே பெருந்தொகையான பொதிகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. மேலும் ஆயிரக்கணக்கான பொதிகள் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொதிகளை அவ்வப்போது யாழ்ப்பாணம் வரும் கப்பல்களில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் சுமார் அறுநூறு பொதிகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் பொதிகள் சிதைந்து பழுதடைந்து காணப்படுவதாகவும், உரிய விலாசதாரர்களுக்கு விநியோகிக்க முடியாதவாறு பொதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு சேதமடைந்த பொதிகளை வந்து பெற்றுக்கொள்ளுமாறு விலாசதாரர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-1)

# மேலும் மூன்று பாடசாலைகளின் ஜி.சீ.ஈ.முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.4

கடந்த செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளில் மேலும் 3 பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு:-

**நயினாதீவு ம.வி.**

ப.சுவர்ணலாதா - 3ஏ, க.சுஜாதா -2ஏபி, வி.விஜயதீபா - ஏ2பி, அ.ஸ்ரீராகவன் - 2ஏசி, வா.திரியாம்பிகை - 3பி, க.சுரேஸ்வரன் ஏபிசி, சோ.கமல்ராஜ் - ஏபிசி, ப.ஜீவநந்தா - ஏபிசி, ப.சகிலா - 2பிசி,க.லோகேஸ்வரி - 2பிஎஸ்.

**பெரியபுலம் ம.வி.**

ச.சஞ்சிகா - 2ஏசி, க.அனுசா - ஏ2பி, ஞா.மயூரா - ஏ2பி,சோ.கேதீஸ்வரன் - ஏ2சி, செ.ஜீவிதா - ஏபிஎஸ், கு.கார்த்திகா - ஏசிஎஸ்.

**அத்தியார் இந்துக் கல்லூரி**

பூ.ராஜ்விநோத் - 3ஏ, ர.சோபிகா -2ஏபி, ஆ.டர்சிகா - 2ஏசி, சு.கௌரி - ஏ2சி, சு.றஜனி - ஏ2சி, பா.ஜசிதா - 2பிசி, நி.நிலானி - 2பிசி, ஆ.டேவானந்தா - ஏ2சி, பு.நிமலதாசன் - பி2சி.

# நனைந்து உடைந்த நிலையில் வந்துசேர்ந்த தபால் பொதிகள்

நல்லூர், நவ.4

திருகோணமலையில் இருந்து நேற்றுமுன்தினம் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள 583 தபால் பொதிகளில் பெருமளவான பொதிகள் நனைந்தும் உடைந்தும் சேதமடைந்த நிலையிலேயே வந்துசேர்ந்துள்ளன என்று யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - பதிவுத் தபால்கள் கூட நனைந்து கிழிந்துபோகும் நிலையிலேயே உள்ளன. இதனால் பதிவுத் தபால்களை வேறுபடுத்த முடியாது தபால் ஊழியர்கள் பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

சில பதிவுத் தபால்களின் முகவரிகள் கூட அழிந்த நிலையில் உள்ளன. இதனால் அவற்றை உரியவர்களிடம் சேர்ப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (1-203-111)



**திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட தபால் பொதிகள் நனைந்து உடைந்த நிலையில் காணப்படுவதையும் சேதமடைந்த பொதிகள் தபால் திணைக்களத்தினரால் மீள பொதிசெய்து வைக்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.** *(படங்கள் : லக்ஷ்மன்)*

# யாழ். ப.நோ.கூ. சங்க கிளைகளில் நானாவிதப் பொருள்கள் விநியோகம்

## இரண்டாம் கட்டமாக வழங்கப்படுகின்றது

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இதுவரை நானாவிதப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளாத சகலருக்கும் தொடர்ந்தும் விநியோகம் இடம்பெறும் என்று சங்கத் தலைவரும் பொது முகாமையாளரும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

நானாவித சில்லறைப் பொருள்கள் முழுமையாகச் சங்கத்துக்குக் கிடைக்கவில்லை இதனால் பலருக்கு குறிப்பிட்ட சில பொருள்களே வழங்கப்பட்டன.

தற்சமயம் வழங்கப்பட்டுள்ள பொருள்களில் தீப்பெட்டி, பூடு(உள்ளி), மல்லி, சன்லைட், லைபோய், தேங்காய் எண்ணெய் என்பன அடங்குகின்றன. அவை விநியோகிக்கப்படவுள்ளன. இவை தவிர பற்பசை, தேயிலை, செத்தல் மிளகாய், புளி, சேர்வ் எக்ஸல், போன்ற பொருள்களும் சகல பாவனையாளர்களுக்கும் வழங்கப்படவிருக்கின் றன.

அத்துடன் சகல குடும்ப அட்டைகளுக்கும் ஒவ்வொரு பால்மா பக்கற் வழங்கப் படும். குழந்தைகளுக்கென வழங்கப்பட்ட லக்ரோஜன் 1,2, அங்கர் 1+3+, நெஸ்பிறே 1+ சுகவீனமுற்றோருக்கான நெஸ்டோமோல்ட் ஆகியவற்றை ஏற்கனவே பெற்றவர்களுக்கு மேலும் 400 கிராம் நிறையுள்ள முழு ஆடைப்பால்மா (அங்கர்,லக்பிறே, டைமன், கைலன்ஸட்) ஏதாவது ஒன்றும் விநியோகிக்கப்படவுள்ளது. - என்றுள்ளது. (1-202)

# வல்வெட்டித்துறை பகுதியில் சுற்றிவளைப்பு

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை படையினர் பாரிய சுற்றி வளைப்புத் தேடுதலை நடத்தினர்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை வல்வெட்டி, தெணியம்மன் ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்த இராணுவத்தினர், வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தியபின் பொதுமக்களின் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றதுடன் வல்வெட்டித்துறை சித்திவிநாயகர் பாடசாலைக்குச் செல்லுமாறு பணித்தனர்.

அங்கு ஒவ்வொருவராக அழைத்த படையினர் அவர்களை தலையாட்டி முன் நிறுத்திய பின்னர், அடையாள அட்டைகளை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-115)

# சிறுவர் மகிழ்வகத்தில் கண்காட்சி

யாழ்.ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் லேனில் அமைந்துள்ள சிறுவர் மகிழ்வகத்தில் இன்று சனிக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு காலை 8.30 தொடக்கம் மாலை 3.30 மணிவரை சிறுவர் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும் - பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் யாழ். போதனா வைத்தியசாலை உள மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி சா.சிவயோகன்,சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள மாவட்ட இணைப்பாளர் திருமதி கே.சிவராஜா, யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ஆர்.சிவசங்கர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (203)

# யாழ்.பல்கலையின் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க உதவுமாறு கோரிக்கை

## மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் தொடர வழி ஏற்படுத்தித் தருமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஒகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழலின் பின் தடைப்பட்டுப்போன எமது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீளஆரம்பிப்பது தொடர்பாக இதுவரை எந்தவிதமாக முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது மிகவும் மனவேதனையளிப்பதாக உள்ளது.

இவ்விடயம் தொடர்பாகவும் கைதுசெய்யப்பட்ட கலைப்பீட மாணவன் சி.பகீரதனின் விடுதலை தொடர்பாகவும் எமது மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு செப்ரெம்பர் 21ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தது.

ஆனால் இன்றுவரை இவ்விடயங்கள் தொடர்பான சாதாகமான பதில்கள் எவையும் எமக்குக் கிடைக்காமையால் மிகுந்த ஏமாற்றமும் கவலையும் அடைந்துள்ளோம்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்திற்குப் பின்னர் எமது கற்றல் செயற்பாடுகளுக்குப் பல்வேறு விதமான இடையூறுகள் தொடர்ந்த வந்தவண்ணமே உள்ளன.

மாணவன் சங்கரின் படுகொலை, மாணவன் பகீரதனின் கைது, படையினர் அடிக்கடி பல்கலைக்கழக வளாகத்தைச் சோதனையிடல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளால் எமது கல்வி நிலைமை முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜெனீவா பேச்சு முடிவுகள் எமது கல்வியை மீளத் தொடர ஏதுவான சூழலைத் தோற்றுவிக்குமென எண்ணிய எமக்கு ஏமாற்றமே கிடைத்தது.

எமது கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பித்தலுக்கான சூழலைத் தோற்றுவிப்பது என்பது கைதுசெய்யப்பட்ட எமது மாணவன் பகீரதனை விடுதலை செய்வதிலும் வெளிமாவட்ட மாணவர்கள் மீளத் திரும்பி பாதுகாப்புடன் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதிலேயுமே தங்கியுள்ளது.

ஏ-9 வீதியைத் திறந்து சீரான போக்குவரத்தை ஏற்படுத்துவதன் மூலமே எமது வெளிமாவட்ட மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்முடியும்.

இவ்விடயங்கள் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் தற்போது அரசுத் தலைமையிடமே உள்ளது.

எனவே இதனை கருத்திற்கொண்டு பல்கலைக்கழகம் இயங்கும் நிலைக்கு பொறுப்பான அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். - என்றுள்ளது. (1-203)

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் நுண்கலைமாணி பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2005/2006 கல்வி ஆண்டில் இசை (வாய்ப்பாட்டு),நடனம்(பரதநாட்டியம்), நாடகமும் அரங்கியலும், கட்புலக் கலை ஆகிய கற்கை நெறிகளின் அனுமதிக்கான தகுதி காண் பரீட்சைக்கே விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் மூலம் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகமை பெற்றிருக்க வேண்டும். மாணவர்கள் தெரிவு செய்ய விரும்பும் பட்டப் பாடநெறிக்குரிய பாடத்தில் திறமைச் சித்தியும் ஏனைய இரு பாடங்களில் ஆகக் குறைந்தது சாதாரண சித்தியும் பெற்றிருக்கவேண்டும்.

எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு 065 - 2240584, 065 - 222 2663 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம். (202)

தொழில்துறைத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் நடத்தப்படவுள்ள தொழில்பயிற்சிக்கு தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் போதனா ஆசிரியர்கள், உதவிப் போதனா ஆசிரியர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோரை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வெளியிணைப்பு இயந்திரத் திருத்தல் பயிற்சி, கணனி மென்பொருள் பயிற்சி ஆகிய கற்கைநெறிகளே நடத்தப்படவுள்ளன.

பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர், மாணவர் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கான வளவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வளவாளர் அணியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை உடனடியாக கே.முருகுப்பிள்ளை,பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-11)

* * *

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பெண்களுக்கான தொழில்திறன் டிப்ளோமாப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளனர். இப்பயிற்சிநெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தையல், மனையியல், சுகாதாரம்/உடல்நலவியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி விலாஸ்
(சைவ உணவகம்)

இல.196(57) கே.கே.எஸ்.வீதியில் இயங்கி வந்த சரஸ்வதி விலாஸ் என்னும் எமது சைவ உணவகம் தற்போது புதுப் பொலிவுடன் இல.226, கே.கே.எஸ் வீதியில் இயங்கி வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்.

(54901)

## றெறாசோ மாபிள் பதித்தல்

மேலைத்தேய நவீன தொழில்நுட்பங்களுடன் வடகீழ் மாகாண ஆரம்ப கால தொழில் விற்பன்னர்

தேவையான மூலப் பொருள்களுடன் வேலை செய்து கொடுக்கப்படும்.

(தேவை ஏற்படின் மின்சார வசதி செய்யப்படும்)

'மாபிள்ஸ்'
கண்டாமை, தொல்புரம். தொ.பே 222 5286, 222 6729

(54899)

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளர்களாகிய

அ.பாலசுப்பிரமணியம், அ.கோபாலகிருஷ்ணன்

ஆகியோரின் அன்புத் தாய்

**திருமதி அம்பலவாணர் பொன்னம்மா**

அவர்கள் 02.11.2006 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,
ப.நோ.கூ.சங்கம், சங்கானை. சிக்கன சேமிப்புக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் 30 வருடங்களுக்கு மேலாக எழுதுவினைஞராகக் கடமையாற்றிய

திருமதி அருள்ஜோதி நல்லரட்ணம்

அவர்களின் பாசமிகு துணைவர்

**திருவாளர் G.S.நல்லரட்ணம்**

அவர்கள் கொழும்பில் காலமானதையிட்டு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
பருத்தித்துறை.

(சி/51269)

## UNIVERSYITY OF JAFFNA
MEDIA RESOURCES AND TRAINING CENTRE (MRTC)
FACULTY OF ARTS

### POST OF TRAINER IN JOURNALISM (ON CONTRACT)

Applications are invited from those with the following qualifications for the post of Trainer in Journalism (on contract basic) at the Media Resources and Training Centre (MRTC).

1. **A Degree from a recognized University.**
2. **Have completed a course in Training fo Trainers in Journalism.**
3. **Posses good experience with print or electronic media or both**

*Allowanes : Rs.17,985/= p.m (all inclusive and fixed)*
*Closing Date : 17.11.2006*

Application forms and other details may be obtained from the Office of the Senior Assistant Registar/ Establishment, University Of Jaffna. Sri Lanka. either in person or by sending a Money order for Rs.100/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money oder/ Postel order drawn in favour of the "Bursar, University Of Jaffna" together with a self - addressed stamped envelop 23x30 cm. in size.

MRTC is an independent Institution under the Administration of the University of Jaffna for the training and capacity building of Journalism and the appointment to the post of Trainer is not governed by the Universities Act. of 1978 as amended to the Universities (Amendment) Act.7 of 1985 and circulars issued by the UGC.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applicatins received after the closing date will be rejected without intimation.

Registrar,
02 November 2006

(C/51262)

## மின் பிறப்பாக்கி

Three Phase - Three kilo watt Dynamo உடன் தேவை.

தொடர்பு கொள்ளவும்.

*021-222 3081*

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இங்லண்ட் லிஸ்ரர் 5 KVA ஜெனரேற்றர் 18Hp லிஸ்ரர் எஞ்சின் மற்றும் போட் கப்றி டீசல் கார் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
சுவேத்திகா தொலைத்தொடர்பு நிலையம்,
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
தொ.பே : 0602213162

### விற்பனைக்கு

Net Cafe பொருள்கள்
Video கடைப் பொருள்கள்
பிறிஜ், மீன் தொட்டி
TVS Victor Mortorcycle
T.P: 021 222 9397
*188 B, Manipay Road, Jaffna.*

### கரவீணா இசை மன்றம்

Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள், கேள்வி ஞானம், Organ Exercise, Theory ஆகியன விற்பனைக்குண்டு. புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.

**151, கோவில் வீதி, நல்லூர்.**
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே)

## மரண அறிவித்தல்கள்

### குமார் சதாசிவம் (ராசு)



யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்தவரும் தற்போது இல.46, சென். ஜேம்ஸ் வீதி, கொழும்பு .15 இல் வசித்து வந்தவருமான குமார் சதாசிவம் (ராசு) அவர்கள் 29. 10. 2006 ஞாயிற்றுகிழமை இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான குமார் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ,காலஞ்சென்ற மணி மற்றும் வள்ளியம்மை ஆகியோரின் அன்புக்கணவரும் பாஸ்கரதாஸ்,பவானி,ஜெனித்தா,கொலஸ்ரிக்கா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2006) சனிக்கிழமை அன்னாரின் கொழும்பு 15, இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு மாதம் பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
ப.விஜயலட்சுமி
(மைத்துனி)

11,முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228017

### குட்டித்தம்பி சின்னத்துரை



மூன்று கோயிலடி, உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது 939, அளுத்மாவத்தை கொழும்பில் வசித்தவருமாகிய குட்டித்தம்பி சின்னத்துரை 29.10.2006 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2006) சனிக்கிழமை கொழும்பிலுள்ள அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டிய இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கோகிலா உமாகாந்தன்
(மருமகள்)

மூன்று கோயிலடி,
உரும்பிராய் மேற்கு.
0112523088

## பிள்ளைகளுடன் வாருங்கள் பிரச்சினைகளைத் தீருங்கள்

### சிறுவர் கண்காட்சி - 2006

இன்று தொடக்கம் திங்கள் வரை
ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள
"சிறுவர் மகிழ்வகத்தில்"
ஆரம்பம் 8.30 மு.ப
பிரதம விருந்தினர் : திரு.சிவசுவாமி- மேலதிக அரச அதிபர்.

**வாருங்கள் பாருங்கள் கூறுங்கள்**

*ஏற்பாடு : விழி உள சமூக அமையம்.*
*அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன்*
அனுசரணை: சிறுவர் மகிழ்வகம்

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1967 - 08 - 26



மறைவு 2006 - 09 - 21

**நடராசா தவராசா**
(தபால் உத்தியோகத்தர்- தெல்லிப்பழை)

இன்று (04.11.2006) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 06.11.2006 திங்கட் கிழமை இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள்.

*கண்டாமை, தொல்புரம், சுழிபுரம்.* (54923)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*தோற்றம் 09 * 10 * 1955*



*மறைவு 05 * 10 * 2006*

**தம்பையா பரந்தாமன்**

*அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (04.11.2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்தி நிகழ்வில் கலந்து கொள்வதோடு, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.*

*மஞ்சவனப்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (54836)

ப.தவமணி
*(ராசாத்தி - மனைவி)*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிகரண அழைப்பும்

*தாயின் மடியில் 01 * 11 * 1952*



*ஆண்டவன் அரவணைப்பில் 06 * 10 * 2006*

அமரர் **கந்தசாமி கருணாநிதி**
(இலங்கை வங்கி உத்தியோகத்தர் - பருத்தித்துறை)

06.10.2006 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவறிந்து பல வகையிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலியை வெளியிட்டோருக்கும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் அனைத்து உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் சபிண்டிகரண நிகழ்விலும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அல்லையம்பதி,*
*துன்னாலை, கரவெட்டி.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/51268)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

*தோற்றம் 02 * 10 * 1933*



*மறைவு 05 * 10 * 2006*

**திருமதி கண்மணி வல்லிபுரம்**

எங்கள் குடும்பத் தலைவி கண்மணி
ஈடு இணை இல்லாத செல்வப் பொன்மணி
எங்கள் வாழ்வை உயர்த்திய பெண்மணி
எம்மைப் பிரிந்து ஏனோ சென்றாய் அம்மணி
திங்கள் ஒன்று சென்றும் நீர் கொட்டுதே கண்மணி
சிவலோகம் நீ பெறுவாய் நன்மணி

கடந்த 05.10.2006 வியாழக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி கண்மணி வல்லிபுரம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.11.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மகன் வ.சிவலிங்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதன் பின் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாராயணன்வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

(54903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## நோர்வேயின் புதிய அழைப்பு

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பணியில், தம்மோடு இணைந்து செயற்படுமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் நோர்வே நாட்டின் இளவரசர் ஹெக்கோன்.

இந்தியாவில் அரச பயணத்தை மேற்கொண்டிருக்கும் இளவரசர், இதற்கான வேண்டுகோளை இந்தியாவிடம் விடுத்திருப்பதாகத் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தை அதில் சம்பந்தப்பட்ட சிங்கள - தமிழர் தரப்புக்கள் தமக்கிடையே பேசித் தீர்க்க முடியாது என்ற இக்கட்டான கட்டத்திலேயே மூன்றாந் தரப்பின் அனுசரணை அவசியமாகியது.

அத்தகைய ஒரு பின்னணியில், சூழ்நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா காலத்தில் நோர்வே அனுசரணைப் பணிக்கு அழைக்கப்பட்டது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனுசரணையாளர் என்ற வகையில் இல்லாமல், மத்தியஸ்தராக வந்து தனது விரலைச் சுட்டுக்கொண்ட அனுபவம் இந்தியாவுக்கு.

அதனாலேயே கடந்த பத்தொன்பது வருடங்களாக இந்தியா தொலைவில் நின்று பார்க்கும் பாத்திரத்தை வகித்து வருகிறது.

ஆளைப் பார்க்காதே, அவர் யார் என்று பார்க்காதே. அவரது ஆட்டத்தைப் பார் எனச் சொல்வது வழக்கம். அந்த வகையில் சிறிதளவு தூரத்தில் நின்று பார்க்கும் பாத்திரத்தை இந்தியா வகித்தாலும்கூட, அதனுடைய ஆசீர்வாதம் இல்லாமல் இனப்பிரச்சினைக்கு வேறு எந்த மூன்றாவது தரப்பாலும் அனுசரணையோ மத்தியஸ்தமோ வழங்க முடியாது என்பதே யதார்த்தம்.

ஆசியாவின் ஆதிக்க பீடமாகத் தான் விளங்க வேண்டும் என்ற குறிக்கோள் உடையது இந்தியா. ஆகவே, தனக்கு அருகில் உள்ள இலங்கையில், வேறு எந்த மூன்றாவது நாடோ அல்லது சக்தியோ, செல்வாக்கோ, ஆதிக்கமோ செலுத்துவதை அது விரும்புவதும் இல்லை; இடமளிக்கப்போவதும் இல்லை என்பது உலகளாவிய ரீதியில் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே.

அதனாலேயே, இதுவரை நடைபெற்ற அமைதிப் பேச்சுகளுக்கு முன்னரும் பின்னருமாக, நோர்வே இந்தியாவுடன் கலந்தாலோசனை என்றும் தகவல் சொல்வது என்றும் ஓடியோடித் திரிந்தது என்பது மிகவும் வெளிப்படையானது. இனப்பிரச்சினையில் மட்டுமன்றி, கொழும்பில் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்க வேண்டும். அதன் இயக்கமும் செயற்பாடுகளும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதிலும்கூட தனது செல்வாக்கையும் விருப்பத்தையும் நிலை நாட்டியும் நிறைவேற்றியும் வருகிறது இந்தியா.

இலங்கையின் அரசாங்கத் தலைவர்களாகப் பதவி ஏற்கும் தென்னிலங்கைத் தலைவர்கள் எவருமே புதுடில்லியின் ''ஆசீர்வாதத்தை''ப் பெறாமல் இருந்ததாக அண்மைக்காலச் சரித்திரம் இல்லை.

புதிதாகப் பதவி ஏற்கும் கொழும்புத் தலைவர்கள் ஒருவர் விடாமல் எல்லோருமே, இந்தியத் தலைவர்களைச் சந்தித்து ''நல்லுறவை''ப் பலப்படுத்திய பின்னரே தமது பதவி உறுதி செய்யப்பட்டதாகக் கருதும் காலம் இது.

பின்புலமும் பின்னணியும் அவ்வாறு இருக்கையில், இந்தியாவின் ஆதரவும், ஆசீர்வாதமும் விருப்பமும் இன்றி, இலங்கை இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வை எட்ட முடியாது. இது சாதாரண மக்கள் தொடக்கம் புத்திஜீவிகள், ராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் என்ற மட்டங்கள் வரையிலும் உணரப்படுவது மிகத் தெளிவானது, மிகத் துலக்கமானது.

எப்படியோ, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தொலைவில் நின்று வெறுமனே வேடிக்கை பார்க்கும் நிலையை இந்தியா கைக்கொள்ளாது; தனது கண்களை அகல விரித்து வைத்துக்கொண்டு உள்ளாந்தரமாகவும், கூர்மையுடனும் செயற்படும் என்பது மட்டும் நிச்சயம்; வெளிச்சம்.

இதனைத் தெரிந்து வைத்துக்கொண்டே, நோர்வே இளவரசர் ஹெக்னோன் தமது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தங்களுடன் இணைந்து செயற்படுமாறு இந்தியாவைக் கேட்டிருக்கிறார்.

இணைத் தலைமை நாடுகள், அவை இவை, என்று எத்தனை பேர் இலங்கை விடயத்தில் மூக்கை நுழைத்தாலும், இந்தியாவைப் பக்கத் துணையாகக் கொள்ளாவிடில் எதுவுமே உருப்படியாக, ஆக்கபூர்வமாக நடைபெறாது என்பதனை நோர்வே அனுபவத்தில் உணர்ந்திருக்க வேண்டும்.

அதன் வெளிப்பாடே இந்தியாவும் தங்களுடன் இணைந்து செயற்படலாம் என்ற நோர்வே இளவசரின் அழைப்பு.

சிங்களப் பெரும்பான்மையினரும் தமிழர்களும் சேர்ந்து ஐந்தரை சகாப்தங்களுக்கு முன்னரே தங்களுக்கு இடையேயான பிரச்சினையைத் தாமே தீர்த்திருக்கலாம். தமிழர் தரப்பில் அதற்கென எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டது இப்போது வரலாறு.

பெரும்பான்மையினரின் - குறிப்பாக சிங்கள அரசியல் தலைவர்களின் - ஆதிக்க வெறியும் அடக்குமுறைச் சுபாவமும் பிரச்சினையை, பிணக்குகளை தீர்ப்பதற்கு வழிவிட வில்லை. இப்போது எவர் எவரெல்லாமோ அரங்கத்தில் நுழைந்துவிட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது நலன்களைப் பின்னிறுத்தி செயற்படப்போவதில்லை. எங்கிருந்தோ எல்லாம் கதாபாத்திரங்கள் வந்துவிட்டன. இந்தியாவும் அவற்றில் ஒன்றாக மேடைக்கு வந்தால் நிலைமை எப்படியாகும் என்பதனை இப்போது ஆரும் கூறமுடியாது.

இந்தியாவின் பஞ்சாயத்து முறையை ஆராய்ந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயலும், கொழும்பு அரசின் மண் சோறு, கறி விளையாட்டில் தானும் சேர்ந்து இந்தியா சேறு பூசிக்கொள்ளக் கூடாது என்பதே ஈழத் தமிழரின் விருப்பமாகும்.

ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் இடையிலான தொப்புள் கொடி என்றுமே அறுந்துவிடாது. இந்தியா - புதுடில்லி - அதனைக் கருத்திற்கொண்டு, ஈழத் தமிழர்களின் அபிலாசைகளை அங்கீகரித்து, அவர்கள் பிறர் ஆதிக்கத்தில் இல்லாது, தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் சுதந்திரமாக வாழ்வதற்கும் உதவினால், முன்னர் படிந்த கறை தானாகவே கரைந்துவிடும்.

## வெளிமாவட்ட அரச ஊழியர்களை இன்று பயணப்பதிவு மேற்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.4

இதுவரை தத்தமது சேவை நிலையத்துக்கு சமுகமளிக்காது யாழ்.மாவட்டத்தில் தங்கியிருக்கும் வெளிமாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை இதுவரை பணிபுரிந்த இடங்களுக்குச் செல்வதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் செயலகத்துக்கு சமுகமளித்துப் பதிவுகளை மேற்கொள்ளும்படியும் -

இதுவரை பதிவுகளை மேற்கொண்டு பயண வசதி கிடைக்காதவர்களும் மேற்கொள்ளாதவர்களும் மீளவும் பதிவு செய்ய வேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

அதேவேளை- பயணத்தை உறுதிசெய்ய வசதியாக அவர்களை நாளை காலை யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்துக்கு வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.(1-75)

## ஜி.சீ.ஈ. (சாதாரண)தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான கருத்தரங்கு ஆரம்பம்

### இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

அடுத்த மாதம் நடைபெற உள்ள ஜி.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு, தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள கணித, விஞ்ஞானப் பாடங்களின் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று ஆரம்பமாகின்றது.

யாழ்.கல்வி வலயத்தின் கீழ்வரும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இன்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவிருந்த கருத்தரங்கு வீரசிங்கம் மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும்-

நாளை முதல் முன்னர் அறிவிக்கப்பட்ட இடங்களில் நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியில் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறுவதால், கருத்தரங்கு நடைபெறும் இடம் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1)

## மன்னாரைச் சேர்ந்த இளைஞர் கொம்பனித்தெருவில் கைது

கொழும்பு, நவ.4

கொழும்பு, கொம்பனித்தெருவில் கைதுசெய்யப்பட்ட மன்னார் - உப்புக்குளம் வாசியான ஜோசப்குமார் ரமணகுமார் என்ற இளைஞரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி கோட்டை நீதிவான் உத்தரவிட்டார்.

ரமணகுமார் வெள்ளவத்தையில் தங்கியிருந்து ஆங்கில வகுப்பொன்றுக்குச் சென்று கொண்டிருந்தார். இவர் கடந்த 31ஆம் திகதி கொம்பனித் தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

ரமணகுமாரின் உறவினர்கள் மன்னாரிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து அவர் கொம்பனித்தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது.

(க)

## சமாதான முயற்சியில் இந்தியாவும் இணையலாம்

### புதுடில்லியில் நோர்வே இளவரசர்

புதுடில்லி, நவ.4

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் சமாதான நடவடிக்கையில் நோர்வேயுடன் இந்தியாவும் இணைந்து செயற்படலாம் - என்று நோர்வேயின் இளவரசர் ஹெக்கோன் தெரிவித்தார்.

நோர்வேயின் இளவரசர் ஹெக்கோன் ஆறு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு இந்தியா வந்துள்ளார். அவருடன் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் றேமன்ட் றொகான் சென்ட்டும் கூட வந்துள்ளார்.

இளவரசர் ஹெக்கோன் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங், வெளிநாட்டு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் உட்பட அரசுத் தலைவர்கள் பலரையும் சந்தித்து உரையாடினார்.

நோர்வேயுடன் இந்தியாவும் இணைந்து இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக உழைக்க முடியும். சர்வதேச அமைப்புகளின் பங்களிப்பையும் பெற்றுக்கொண்டால். மேலும் பயன் அடையலாம் - என்று நோர்வே இளவரசர் கருத்துத் தெரிவித்தார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் றேமன்ட் றொகான் சென்ட் கருத்துத் தெரிவிக்கையில் -

பொறுமையை வெளிப்படுத்துவது சம்பந்தப்பட்ட தரப்புகளின் பொறுப்பாகும். சமாதான முயற்சிக்கு தொடர்ந்து ஒத்து ழைப்பு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அடுத்தகட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கையின் களநிலைவரம் குறித்து அறிந்து கொள்வது அவசியம்-என்றார். (அ-203)

## பெருமளவு வெடிபொருள்கள் திருகோணமலையில் மீட்பு!

திருகோணமலை, நவ.4

திருகோணமலை - விகாரை வீதியில் வாய்க்கால் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடி குண்டுகளை நேற்றுக் காலை பொலிஸார் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பெற்றோல் நிரப்பும் நிலையத்துக்கும், நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கும் இடையில் அமைந்துள்ள வடிகால் குழிக்குள் மரக்கறி மற்றும் சீனிச் சாக்குக்குள் இவ்வாயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ கவச வாகனங்களைத் தாக்கி அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்த நான்கு கண்ணி வெடிகள், ஒரு கிளைமோர் குண்டு, 2 மிதிவெடிகள், ஆர்.பி.ஜி. குண்டுகள் முதலான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தினால் நேற்று சில மணி நேரம் திருகோணமலைக்கான போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. அங்கிருந்தோர் பொலிஸார் மற்றும் இராணுவதினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரும், பொலிஸாரும் அப்பிரதேசத்தைச் சுற்றி வளைத்துத் தேடுதலில் ஈடுபட்டனர். இவ்வாயுதங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் கடற்படையினரின் உதவியுடன்செயலிழக்கச் செய்யப்பட்டன என்று திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர். (க)

## குடாநாட்டுக்கு உணவுப் பொதிகளை தபாலில் அனுப்பத் தடையேதும் இல்லை

### அஞ்சல்மா அதிபர் சேனாதீர தகவல்

கொழும்பு, நவ.4

யாழ். குடாநாட்டிற்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகளை தபால் நிலையங்கள் ஊடாக அனுப்பிவைக்க முடியும் என்று தபால்மா அதிபர் சேர்வின் சேனாதீர நேற்று தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிற்கு அனுப்பவென ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதிகள் உரிமையாளர்களிடமே திருப்பி வழங்கப்படுவதாக வெ[illegible]கிய செய்திகளை அவர் மறுத்தார்.

அத்தியாவசிய உணவுப் பொதிகள் பஸ் அல்லது ரயில் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு -

அங்கிருந்து கடல்மார்க்கமாக காங்கேசன் துறைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன என்றும் தபால் மா அதிபர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு உருவாகி பட்டினி நிலைமை ஏற்பட்டிருப்பதை அடுத்து குடாநாட்டில் வாழும் தங்கள் உறவினர்களுக்கு சீனி, பால்மா, சவர்க்காரம் போன்ற பொருள்களை கொழும்பில் உள்ள தமிழர்கள் தபால் மூலம் அனுப்பி வருகின் றனர்.

இதனால் பெருமளவு தபால் பொதிகளைக் கையாளும் நிலைமை தபாலகங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. (க)

நாளை

ஐப்பசி 19
ஞாயிற்றுக்கிழமை
05.11.2006
திதி : பூரணை
முன்னிரவு : 07.08
நட்சத்திரம் : அச்சுவினியாம்
முற்பகல் : 09.52
பூரணை விரதம்
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.04 - 06.04

## கடற்படை கைது செய்த தமிழக மீனவர்கள் உண்ணாவிரதப் போரில் குதிக்க முஸ்தீபு

சென்னை, நவ.4

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர் கள் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 15 க்கும் மேற்பட்ட தமிழக மீன வர்களைக் கடற்படையினர் கைது செய்தனர். அதன் பின்னர் அனைவரும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மன்னார் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை அனைவரும் முன்னிலைப் படுத்தப்பட்ட போது இவர்களை அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கபதில் நீதிபதி எம்.பி. பாரூக் உத்தரவிட்டார்.

இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த தமிழக மீனவர்கள், ''பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். எமது குடும்பங்கள் நாளாந்தத் தேவைகளுக்கே எதுவும் கிடைக்காத பாரிய பொருளாதார நெருக்கடிக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன. எனவே, எங்களை விடுவிக்க வேண்டும். எங்களை விடுவிக்காவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம்'' என்று கூறினர்.

தங்களை விடுவிப்பதற்குக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் முயற்சி எடுக்காதது தொடர்பாகவும் மீனவர்கள் குற்றம் சாட்டினர்.

இந்த வழக்கை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுப்பதாகப் பதில் நீதிபதி தெரிவித்தார். இதனையடுத்து மேலும் 15 நாட்களுக்கு மீனவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசும் ஐ.தே.கட்சியும் சேர்ந்து ஏ-9 பாதையை திறக்க வேண்டும்

## 'இந்து' பத்திரிகை ஆசிரிய தலையங்கத்தில் வலியுறுத்து

புதுடில்லி, நவ.4

அரசும், அதன் புதிய நேச சக்தியான ஐ.தே.கவும் ஒன்று சேர்ந்து யாழ். மக்களின் மனிதாபிமானத் தேவைகளை முன்நிறுத்தி அவர்கள் துயர் துடைக்க 'ஏ-9' பாதையைத் திறக்க முன்வர வேண்டும் என்று சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தி எழுதியிருக்கிறது.

ஆசிரியர் தலையங்கத்தின் சாராம்சம் வருமாறு:

''இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக் கும் இடையே நடந்த ஜெனிவா -2 பேச்சு, 'ஏ-9' நெடுஞ்சாலை விடயத்தில் தோல்வியில் முடிந்திருக்கிறது. இது இரு தரப்பிலுமுள்ள இனவாதிகளைத் தவிர மற்ற எல்லோருக்கும் பெரும் ஏமாற்றமாகவே உள்ளது.

இந்த விவகாரத்தின் உச்சமாக விடுதலைப் புலிகள், நெடுஞ்சாலையின் உடனடி திறப்புக் கோரிக்கையையே, பேச்சை முன்வைப்பதற்கான பணயப் பொருளாக வைத்திருக்கிறார்கள். 'ஏ-9' பாதை மூடப்பட்டதால் உருவான நெருக்கடியை ஜெனிவாவுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் அரசு நல்லபடியாகக் கையாண்டிருக்கலாம்.

யாழ். குடாநாட்டு மக்களின் அவல வாழ்வு குறித்து விடுதலைப்புலிகள் உண்மையிலேயே கவலைப் படுவார்களேயானால், அவர்கள் சர்வதேச மற்றும் ஐ.சி.ஆர்.சி. போன்ற உதவி வழங்கும் முகவர் நிலையங்களின் கப்பல்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க முன்வர வேண்டுமென்று அரசு கோரியுள்ளது. இந்தக் கோரிக்கையானது இலங்கை அரச படையினரது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலோ அல்லது கட்டுப்பாடற்ற பகுதி களிலோ என்ன நடக்கலாம், என்ன நடக்கக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும். அதிகாரத்துக்கான 'வீட்டோ' வை விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்தமைக்கு ஒப்பானதாகி விடாதா?

உள்நாட்டுப் பாதுகாப்பு விடயத்தில் உரிய பாதுகாப்புக்குக் கவனம் செலுத்தத்தான் வேண்டும். ஆனால், அதேநேரம் மனிதாபிமானத்துக்கான கருமங்களை முன்நிறுத்தி செயல்படல் வேண்டும். இந்த வகையில், சமாதானத் தேடலில் அரசுடன் புதிதாக இணைந்திருக்கும் நேச சக்தியான ஐ.தே.கவும், அரசும் பொது மக்களின் போக்குவரத்துக்காக ஏ-9 பாதையைத் திறந்து விடுவதற்கு நடைமுறைக்குச் சாத்தியமான செயல் பாடுகளில் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். மனித அழிவை இதன் மூலம் தடுக்கவும் முன்வர வேண் டும். இது நல்லதொரு அரசியல் முறையாகவும் விளங்கும் - என்று 'இந்து'வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-க)



கிளிநொச்சியில் விமானப்படையினரின் குண்டுவீச்சில் உயிரிழந்த - ஒரே குடும்பத்தைச் சேர்ந்த - ஐவரி னதும் இறுதிச் சடங்குகள் நேற்று உருத்திரபுரத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

# வவுனியாவில் தங்கியுள்ள பயணிகளை படிப்படியாக யாழ். அனுப்ப ஏற்பாடு

## முதற்கட்டமாக இன்று 300 பேர் பயணம்

கொழும்பு, நவ. 4

வவுனியாவில் தங்கியுள்ள 2 ஆயிரத்துக்கும் அதிகமான குடாநாட்டு மக்களை கப்பல் மூலம் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று 300 பயணிகள் வவுனியாவிலிருந்து திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பியசென் சார்ல்ஸ் தெரிவித்துள்ளார்.

பஸ்களின் மூலம் திருகோணமலைக்குக் கொண்டுசெல்லப்படும் பயணிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை கப்பல் மூலம் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறே ஏனைய பயணிகளும் படிப்படியாக அனுப்பிவைக்கப்படவுள்ளனர். இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் திருகோணமலை சென்று அங்குள்ள பிரதேச செயலாளரிடம் பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க)

# வாகரையில் ஷெல்கள் வீழ்ந்து தந்தையும் மகனும் மரணம்

மட்டக்களப்பு, நவ.4

மட்டக்களப்பு - மாங்கேணி இராணுவ முகாமிலிருந்து நேற்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரை நோக்கி மேற்கொள்ளப் பட்ட மோட்டார் தாக்குதலினால் பொது மக்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

கொல்லப்பட்டவர்கள் நல்லதம்பி தியாகராஜா (வயது-40) அவரது மகனான தியாகராஜா ரஜனிகாந் (வயது-28) (இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை) என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் வீதியால் சென்ற போது தாக்குதலுக்குள்ளாயினர். சடலங்கள் வாகரை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலையிலிருந்து நண்பகல் வரைக்கும் மக்கள் குடியிருப்புக்கள் மீது கடுமையான மோட்டார் தாக்குதலை படையினர் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர். (ஐ)

# யாழ்ப்பாணத்துக்கு ஐ.நாவின் உதவிப்பொருள்களை அனுப்பும் ஏற்பாடு பற்றி ஆராய பிரதிநிதிகள் வருவர்

கொழும்பு, நவ.4

தரைத்தொடர்பின்றித் துண்டிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை கடல்மார்க்கமாக அனுப்பும் ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் பேசுவதற்காக ஐ.நாவின் பிரதிநிதிகள் இருவர் எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பு வருகைதர வுள்ளனர்.

குடாநாட்டுக்குச்செல்லும் உணவுக் கப்பல்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கொடியைப் பறக்கவிட அந்தச்சபை அனுமதி வழங்கி இருப்பதாக அரசு கூறியதைத் தொடர்ந்து ஐ.நாவின் பிரதிநிதிகள் கொழும்பு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப்பொருள்களை கப்பல்மூலம் எடுத்துச் செல்லும்போது ஐக்கிய நாடுகள் சபையின் கொடியைப் பாவிக்க ஐ.நா. சபை ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது. இது குறித்து மேலதிக தகவல்களைச் சேகரிப்பதற்காக ஐ.நா.சபை பிரதிநிதிகள் எதிர்வரும்9ஆம்திகதி இலங்கை வரவுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவம் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

மோதலில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் இணக்கம் தெரிவித்தால் மட்டுமே உணவுக் கப்பல்களுக்கு வழித்துணை வழங்க முடியும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவித்திருக்கிறது.

இதனால் உணவுக் கப்பல்களை கடற்படையின் பாதுகாப்புடனேயே அரசு காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு அனுப்பி வருகிறது.

இந்நிலையில் உணவுக் கப்பல்களை ஐக்கிய நாடுகள் சபையின் கொடியுடன் குடாநாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அரசு கூறியிருக்கின்றது. இது தொடர்பான வழிவகைகளை ஆராய்வதற்கே இரண்டு பிரதிநிதிகளை ஐ.நா. கொழும்புக்கு அனுப்புகின்றது என்று அரச தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

# பல்கலை. மானிய ஆணைக்குழு உறுப்பினராக சிற்றம்பலம் நியமனம்

யாழ்ப்பாணம், நவ.4

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கடந்த 25ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார்.



ஆணைக்குழு உறுப்பினராக இருந்த பேராசிரியர் எஸ்.குணானந்தனின் மறைவுக்குபின் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமனம் பெற்றுள்ளார்.

பல்கலைக்கழகங்களின் நிர்வாக விடயங்கள், துணைவேந்தர் நியமனம் போன்றவற்றை இந்த ஆணைக்குழுவே மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## இணைத்தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் வருந்துகின்றனர். இந்தக் குண்டுத் தாக்குதலால் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை பாதிப்புக்குள்ளாகி நோயாளர்கள் வெளியேறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்க்கவேண்டும் என்று இணைத்தலைமை நாடுகள் எதிர்பார்க்கின்றன.

இரு தரப்பினருக்குமிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அடுத்த கட்டப் பேச்சுகளை நடத்தக் கூடிய சூழ்நிலையில் மோதல்களைத் தவிர்க்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கைதான ஐந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் து.சுவேந்திரராஜா நேற்றுப் பார்வையிட்டார்.

இவர்கள் இன்று காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு மாற்றப்படவுள்ளனர் என்றும்-

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் அவர்கள் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளனர் என்றும் - அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் - படை அதிகாரிகள் ஆணைக்குழு அதிகாரிக்குத் தெரிவித்துள்ளனர்.

சிவசுப்பிரமணியம் தர்மேந்திரா (வயது 25 - யாழ். பிறவுண் வீதி), சிவானந்தம் சிறிதரன் (வயது 30 - கொக்குவில் மேற்கு), நடராஜா நர்மதன் (வயது 20 - சுன்னாகம் கிழக்கு), திருஞானசம்பந்தர் றமணன் (வயது 23 - இணுவில் மேற்கு), பாஸ்கரன் பிரதாப் (வயது 23 - இணுவில் மேற்கு) ஆகியோரே காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு மாற்றப்படவுள்ளவர்கள் ஆவர். (அ-1-79)

# புதிய அணுகுமுறையில் அமைதிப் பேச்சை தொடரக் கோருகிறது சமாதானப் பேரவை

கொழும்பு, நவ.4

காலத்தை வீணடித்து தாமதப்படுத்தாமல், பல சுற்று சமாதானப் பேச்சுக்கான திகதிகளை நிர்ணயிப்பதற்கு அரசும் - விடுதலைப் புலிகளும் முன்வரவேண்டும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை அறிக்கையொன்றின் மூலம் இரு தரப்பாரையும் கேட்டிருக்கிறது.

அடுத்துவரும் பேச்சுகளில், மனிதாபிமான பிரச்சினைகளையும், அரசியல் பிரச்சினைகளையும் நேரம், காலம் ஒதுக்கி ஏக காலத்தில் பேசுவதற்கு முன்வருமாறும் சமாதானப் பேரவை கோரியிருக்கிறது.

இன மோதல்களுக்கு முடிவு கட்டுவதற்குப் புதிய அணுகுமுறை ஒன்று தேவை. இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அரசாங்கத்துடன் இணையுமாறு ஐ.தே.கவுக்கு அழைப்பு விடுக்க எடுத்த முடிவு வரவேற்கத்தக்கதே.

கட்சி அரசியல் நலனுக்கு அப்பால் நின்று, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இரு கட்சிகளின் தலைமைத்துவமும் சேர்ந்து பணி புரிவதற்கு முன்வந்திருப்பதும் வரவேற்கத்தக்கது மட்டுமல்ல, இந்தப் பிரச்சினைக்கான தீர்வை புதிய அணுகுமுறையில் புதிய உற்சாகத்தோடு முன்னெடுப்பதற்கான அத்திபாராம் போடப்பட்டுள்ளது - என்றும் சமாதானப் பேரவை தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## தரை, கடல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைப் பார்த்துப் ''பொறுமையாக இருங்கள்'' என்று நாங்கள் கூறி வருகிறோம்.

நாங்கள் நீண்ட காலம் பொறுமையாக இருந்துவிட முடியாது. எனவே, வடக்கு - கிழக்கில் தரை, கடல், வான்வழிகளூடாகத் தாக்குதல் நடத்தத் தீர்மானித்து விட்டோம்.

எங்களது அரசு மக்களால் தெரிவு செய்யப்பட்டது. அந்த மக் களைப் பாதுகாக்க வேண்டியது எங் கள் கடமை. பிரபாகரன் தான் செய்வதுதான் சரி என்று நினைக்கிறார். ஒரு ஜனநாயக அரசைப் புலிகள் ஆயுதங்கள் கொண்டு அச்சுறுத்துகிறார்கள். இந்த நிலைமை நீடிப்பதை நாங்கள் அனுமதிக்க முடியாது.''

- இவ்வாறு பிரதமர் அங்கு தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். (க)

## ஏ-9 வீதியைத் திறப்பது குறித்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதையைத் திறப்பதால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாது. அவ்வாறு நிகழாதவண்ணம் பாதையை எவ்வாறு திறப்பது என்பது பற்றி விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும் என ஜனாதிபதி என்னிடம் கூறினார்.

இரு தசாப்தங்களாகத் தொடர்ந்த யுத்தத்தால் இந்த நாடு சந் தித்த இழப்புகள் அதிகம். உயிர் மற் றும் பொருள் சேதங்கள் ஏற்பட்டதோடு பொருளாதாரத்திலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்த நிலை தொடர்ந்தால் நாடு மிஞ்சாது. உடனடியாக இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண் டும் என்ற உண்மை எம்மால் உணரப்பட்டது.

அதற்கமைவாகவே ஐக்கிய தேசியக் கட்சி 2002 ஆம் ஆண்டில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கான ஒரு வழியை உருவாக்கியது. நிலையான சமாதானம் எட்டப்படுவதற்கு முன் எமது ஆட்சி கலைக்கப்பட்டமை துரதிஷ்டம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க இராணுவ நடவடிக்கை ஒருபோதும் சரிவராது. அரசியல்தீர்வுதான்ஒரேவழியென இப்போதைய அரசும் உணர்ந்திருக்கின்றது.

சமாதானம் மூலம் தீர்வு ஒன்றைக் காண விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கடந்த மாவீரர் தினச் செய்தியில் ஜனாதிபதிக்கு காலக்கெடு ஒன்றை வழங்கினார்.

இந்தக் காலக்கெடு எதிர்வரும் 27ஆம் திகதி வரும் மாவீரர் தினச் செய்தியுடன் முடிவுக்கு வருகின்றது.

அதன்பின் யுத்தம் வெடிக்கலாம் என்ற ஆபத்து உள்ளது. எனவே, யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் சீராக நடைமுறைப்படுத்தி யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும் - என்றார். (அ-க-1)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடத்தப்பட்ட வான் தாக்குதலில் ஜெனிவாப் பேச்சுகளுக் குப் பின்னர் விமானப்படையினர் மேற்கொண்ட மூன்றாவது நடவடிக்கை என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இதேவேளை -

கிழக்கில் அரசுப் படைகள் மீது பெரும் எடுப்பில் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வரு கின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் சமரசிங்க குற்றஞ் சாட்டியிருக்கிறார். (ஐ)

LOGIC
By : P.கமல்
2007 : பகுதி II
சனி, ஞாயிறு - 8 a.m.
2008 : அனுமானம்
சனி, ஞாயிறு - 9 a.m
DAY CLASS ஆரம்பம்
புதன், வெள்ளி, சனி, ஞாயிறு - 7 a.m
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
தனிப்பட அனுமதி உண்டு

CHEMISTRY
ரஞ்சித்காந்
A/L 2008, 2007
SAT/SUN-4-5p.m.
வெப்ப இரசாயனம்
தனிப்பட்ட கவனம்.
மாதிரிப்பரீட்சை
ஆரம்பம் : 04.11.06
Sat - 4 p.m.
BRAIN POWER
INSTITUTE

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org